# வரலாற்று நூல்களில் இலங்கைத் தமிழர் அன்றும் - இன்றும்


பெயர் : ஈழஅமலா பஞ்சலிங்கம்

பதிவு இலக்கம் : EU/IS/2012/AC/252

சுட்டெண் : CS 5122



EXAMINATION UNIT
FACULTY OF ARTS AND
CULTURE
21 JAN 2019
Eastern University, Sri Lanka.

LIBRARY
07 SEP 2019
EASTERN UNIVERSITY, SRI LANKA.


இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணிச் சிறப்புக் கற்கை நெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.


FAC697
Project Report
Library - EUSL



வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை


2018.

# முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றைச் சிறப்புப் பாடமாக பயிலும் நான் எனது இறுதியாண்டுக் கலைமாணித் தேர்விற்காக "வரலாற்று நூல்களில் இங்கைத் தமிழர்: அன்றும் - இன்றும்" என்ற இவ்வாய்வினைச் சமர்ப்பிக்கின்றேன். இவ்வாய்வின் நோக்கம் தமிழர் வரலாறு தொடர்பான முழுமையான அம்சங்களை வெளிக்கொணர்வதோடு வெளிப்படுத்தப்படாது மறைக்கப்பட்ட வரலாற்று அம்சங்களை கண்டறிந்து வெளிப்படுத்துவதாகும். அந்தவகையில் இலங்கை தனக்கே உரித்தான தனித்துவமான வரலாற்றையும், பண்பாட்டையும் கொண்டு காணப்படுகின்றது. தென்னாசியாவில் தொடர்ச்சியான இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பைக் கொண்ட இலங்கைத் தீவின் அமைவிடம், பௌதீக மற்றும் இயற்கை வளங்கள் என்பவற்றின் காரணமாக, ஆரம்ப காலந்தொட்டுப் பல நாட்டவர்களும் இத்தீவின் மீது தமது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இதன் விளைவாக ஈழத்துப் பண்பாடுகளோடு பிறநாட்டுப் பண்பாடுகள் கலப்புற்று, பலநாட்டுப் பண்பாடுகளோடு இணைந்த வகையில் ஈழத்தின் பண்பாடும், வரலாறும் கட்டியெழுப்பப்பட்டது.

இலங்கை வரலாற்றில் தமிழர் தொடர்பாக வெளிவந்த நூல்கள் தமிழர்களின் பண்டைய இருப்பு, பெருமை, வளம் உட்பட பல்வேறு சிறப்புக்களை வெளிப்படுத்தும் ஆதாரமாக விளங்குகின்றது. அந்த வகையில் "வரலாற்று நூல்களில் இலங்கைத் தமிழர் அன்றும் - இன்றும்" என்னும் தலைப்பின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழர் வரலாறு காலங்காலமாகப் பெருமைப்படுவதற்குரிய ஒரு விடயமாகக் காணப்படுகிறது. பல்லின கலாசாரங்களைக் கொண்ட இலங்கை வரலாற்றில் தமிழர் வரலாறு என்பது தொன்று தொட்டுப் பேணிப் பாதுகாக்கப்படுகின்ற ஓர் அம்சமாக விளங்குகின்றது. எனவே இலங்கைத் தமிழர் தொடர்பாக வெளிவந்த பிரதானமான சில வரலாற்று நூல்களை ஆதாரமாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது போன்ற ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு, பல புதுமைகள் படைக்கவிருக்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்குத் திடமான ஓர் அடித்தளமாகவும், வழிகாட்டலாகவும் இவ்வாய்வு அமையும் என நம்புகின்றேன்.

-ஆய்வாளர்-

## பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| நன்றியுரை | ii - iii |
| சுருக்கக் குறியீட்டு விளக்கங்கள் | v |
| **அத்தியாயம் - 01** | |
| ஆய்வுஅறிமுகம் | 1 - 6 |
| **அத்தியாயம் - 02** | |
| ஐரோப்பியர் காலம் வரை இலங்கைத் தமிழர் பற்றிய வரலாற்றுப் பார்வை | 7 – 15 |
| **அத்தியாயம் - 03** | |
| 2000 இற்கும் 2010 இற்கும் இடையில்வெளிவந்த வரலாற்று நூல்களில் தமிழர் வரலாறு | 16 – 58 |
| **அத்தியாயம் - 04** | |
| 2010 இற்குப் பின்னர் வெளிவந்த வரலாற்று நூல்களில் தமிழர் வரலாறு | 59 – 98 |
| **அத்தியாயம் - 05** | |
| முடிவுரை | 99 - 102 |
| உசாத்துணைகள் | 103 - 106 |
| பின்னிணைப்பு | vi - viii |